# 10 பஞ்ச புராணம்

சைவ ஆலயங்களில், பூசைவேளையில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன வரிசைக் கிரமத்தில் ஓதப்படுகின்றன. அவை 'பஞ்சபுராணம்' எனப்படும். பஞ்சபுராணத்தைப் ஓதிய பின்னர் திருப்புகழ் பாடும் வழக்கமும் உள்ளது.

ஆலயங்களில் மட்டுமன்றி, வீடுகளிலும் பாடசாலைகளிலும் பஞ்சபுராணம் ஓதப்படுகின்றது. வீட்டில் காலை, மாலை வழிபாடுகளின் போதும், விசேட வழிபாடுகளின் போதும் பாடசாலையில் காலைப் பிரார்த்தனை, வெள்ளிக்கிழமைப் பிரார்த்தனை, விழாக்கள் என்பன நடைபெறும் போதும் பஞ்சபுராணம் ஓதப்படுவதைக் காணலாம்.

உங்கள் பாடநூலில் உள்ள திருமுறைப் பாடல்களில் பஞ்சபுராணத்தை மனனம் செய்திருத்தல் அவசியமானதாகும். அவ்வாறு மனனம் செய்திருந்தால், வேண்டிய இடத்தில் உங்களால் பயமின்றி, பிழையறப் பாடமுடியும். பஞ்சபுராணம் ஓதும்போது. முதலில் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்வதும், அவற்றை ஓதிய பின் 'திருச்சிற்றம்பலம்' என்று கூறி நிறைவு செய்வதும் சைவமரபாகும். அவ்வாறே, பஞ்சபுராணத்தை எழுதும்போதும், முதலில் 'திருச்சிற்றம்பலம்' என்று எழுதுவதும், அதனை எழுதிய பின்னா 'திருச்சிற்றம்பலம்' என்று எழுதி நிறைவு செய்வதும் மரபாகும். பஞ்சபுராணத்தைப் பாடும்பொது எழுந்த நின்று. கைகூப்பி, பக்தியோடும், பண்ணோடும் ஓத வேண்டும்.

பஞ்சபுராணத்திலுள்ள தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பனவும் அவற்றைப் பாடியவர் பெயர், தலம், பாடப் பெற்ற சந்தர்ப்பம், பண் என்பன பற்றிய குறிப்புகளும் தனித்தனியே தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்துப் பயன் பெறுங்கள்.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பஞ்சபுராணம் என அழைக்கப்படுபவை எவை?
2. பஞ்சபுராணம் ஓதப்படும் சந்தர்ப்பங்கள் மூன்றினைத் தருக.
3. 'திருச்சிற்றம்பலம்' எவ்வெப்போது சொல்லப்படும்?
4. பஞ்சபுராணத்தை ஓதும் போது கவனிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

**02. சரியான சொல்லைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

மனனம், பஞ்சபுராணம், தேவாரம், திருப்புகழ்

1. பஞ்சபுராணம் ஓதும் போது ....................................... முதலில் பாடப்படும்.
2. பஞ்சபுராணம் ஓதிய பின்னர் .............................. பாடும் வழக்கு உள்ளது.
3. ............................ ஆலயங்கள், வீடு, பாடசாலை ஆகிய இடங்களில் பாடப்படும்.
4. பஞ்சபுராணத்தை ............................ செய்திருத்தல் நன்று.

## செயற்பாடு

1. பஞ்சபுராணத்தை மனனம் செய்க. எழுந்து நின்று கைகூப்பி, பக்தியோடும் பண்ணோடும் அதனைப் ஓதிக் காட்டுக.

### பாடச்சுருக்கம்

- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன பஞ்சபுராணத்தில் அடங்கும்.
- பஞ்சபுராணம், கோயில், வீடு, பாடசாலை போன்ற இடங்களில் ஓதப்படும்.
- பஞ்சபுராணம் ஓத முன்பும் ஓதிய பின்பும் 'திருச்சிற்றம்பலம்' எனச் சொல்ல வேண்டும்.
- பஞ்சபுராணம் எழுதமுன்பும், எழுதியபின்பும் 'திருச்சிற்றம்பலம்' எழுத வேண்டும்.
- பஞ்சபுராணம் ஓதும் போது கவனிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் பல உள்ளன.

## (அ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் - தேவாரம்

### பாடல் - 01

உமையம்மையார் ஊட்டிய ஞானப்பாலை உண்ட மூன்று வயதுக் குழந்தை, 'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடத் தொடங்கியது. அது ஞானசம்பந்தம் பெற்ற குழந்தை ஆதலால், ஞானசம்பந்தர் எனப் பெயர் பெற்றது. 'தோடுடைய செவியன்' என்ற தேவாரம் அவரால் முதலாவதாகப் பாடப்பட்டதாகும்.

**தலம்** - சீர்காழி **பண்** - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

**தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்**
**காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்**
**ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த**
**பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை :

சிவபெருமான் தோடு அணிந்த காதினை உடையவராய் இடப வாகனத்தில் வீற்றிருந்தார். தூய வெண்ணிறமுடைய மூன்றாம் பிறைச்சந்திரனைத் தலையிலே சூடியிருந்தார். சுடுகாட்டுச் சாம்பலைத் திருமேனியிற் பூசியிருந்தார். அவர் எனது உள்ளத்தைக் கவர்ந்துள்ளார். பல இதழ்களைக் கொண்ட தாமரைப்பூவின் மேல் வீற்றிருப்பவரான பிரமா முற்காலத்தில் வணங்கித் துதிக்க, அவருக்கு அருள் புரிந்தவர். பெருமை உடைய பிரமாபுரம் என அழைக்கப்படும் சீர்காழித் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமான் அவரல்லவோ?

### பத விளக்கம் :

விடை - இடபம்; வெண்மதி - வெண்ணிறமுடைய மூன்றாம் பிறை; காடு - சுடுகாடு பொடி - சாம்பல்; ஏடு - மலர் இதழ்; ஏடுடைய மலரான் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமா; பணிந்து - வணங்கி; ஏத்த - துதிக்க; பீடு - பெருமை, புகழ்; பிரமாபுரம் - சீர்காழியின் மறுபெயர்.

### பாடல் - 02

திருக்கேதாரம், உமாதேவியார் சிவபிரானைப் பூசித்து அவரது இடப் பாகத்தில் இருக்கும் பேறு பெற்ற தலமாகும். இத்தலம் வட இந்தியாவில் இமயமலைச் சாரலில் உள்ளது. திருஞானசம்பந்தர், திருக்காளத்தித் தலத்தில் இருந்தபோது, திருக்கேதாரத்தைப் பற்றிக் கேள்வியுற்று, அத் தலத்தை மானசீகமாகத் துதித்துப் பதிகம் பாடினார்.

**தலம்** - திருக்கேதாரம் **பண்** - செவ்வழி

திருச்சிற்றம்பலம்

**தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார் மலர்**
**இண்டைகட்டி வழிபாடு செய்யும் இடமென்பரால்**
**வண்டுபாட மயிலால மான்கன்று துள்ள வரிக்**
**கொண்டைபாயச் சுனைநீல மொட்டலருங்கேதாரமே.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை :

வண்டுகள் பாடவும், மயில்கள் ஆடவும், மான்கன்றுகள் துள்ளவும், அழகிய வரிகளையுடைய கெண்டை மீன்கள் பாயவும், குளத்திலே நிலோற்பல மொட்டுக்கள் விரியும் இடத்தில் அமைந்துள்ள தலம் திருக்கேதாரம் ஆகும். அத்தலமானது அடியவர்கள் தமது ஐம்பொறிகளாகிய யானையை அடக்கி, வண்டுகள் மொய்க்கும் பூக்களைத் தலைமாலையாகக் கட்டி, பூமாலை கட்டும் தொண்டைச் செய்து, இறைவனை வழிபடும் இடம் என ஞானியர் கூறுவர்.

### பத விளக்கம்

தொண்டர் - அடியவர்: அஞ்சு - ஐம்பொறிகள் (மெய், வாய், கண், மூக்கு, செவி); களிறு - ஆண் யானை; சுரும்பு - வண்டு; இண்டை - தலை மாலை; என்பவரால் - என்பர். (ஆல் - அசை) அஞ்சு - களிறு - ஐம்பொறிகளாகிய மதங்கொண்ட ஆண் யானை (உருவகம்) சுனை - குளம்; நீலம் - நீலோற்பலம்.

## (ஆ) திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

### பாடல் - 01

தேவார முதலிகள் மூவருள் திருநாவுக்கரசு நாயனாரும் ஒருவர். சூலைநோய் காரணமாக அவர் தாங்கொணாத் துன்பமடைந்தார். சமணர் அவருக்குச் செய்த வைத்தியம், மந்திரம், தந்திரம் என்பவற்றால் நோய் மேலும் அதிகரித்தது. அந்நிலையில் சமணர்களால் கைவிடப்பட்ட அவர், ஒருவரும் அறியாமல் தம் தமக்கையாரிடம் சென்றார். தமக்கையார் அவருக்குத் திருவைந்தெழுத்து ஓதித் திருநீறு கொடுக்க, அவர் அதனை உடல் முழுவதும் அணிந்தார். தமக்கையார், தம் தம்பியை அழைத்துக் கொண்டு திருவீரட்டானேச்சுரர் சந்நிதிக்குச் சென்றார். நாவுக்கரசர் அங்குள்ள இறைவனைப் போற்றி, ‘‘கூற்றாயினவாறு......’’ என்று தொடங்கும் இப்பதிகத்தைப் பாட, அவரது சூலை நோய் நீங்கியது. இது அவரால் முதலில் பாடப்பட்ட தேவாரமாகும்.

**தலம்** - திருவதிகை வீரட்டானம் **பண்** - கொல்லி

திருச்சிற்றம்பலம்

**கூற்றா யினவா றுவிலக் ககிலீர்**
**கொடுமை பலசெய் தனநா னறியேன்**
**ஏற்றா யடிக்கே இரவும் பகலும்**
**பிரியா துவணங் குவனெப் பொழுதும்**
**தோற்றா தென்வயிற் றினகம படியே**
**குடரோ டுதுடக் கிமுடக் கியிட**
**ஆற்றே னடியே னதிகைக் கெடில**
**வீரட் டானத் துறையம் மானே.**

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை :

திருக்கெடிலம் என்னும் ஆற்றிற்கு வடபால் விளங்கும் திருவதிகை என்னும் தலத்திலே எழுந்தருளியிருக்கும் வீரட்டானேச்சுரப் பெருமானே! யமன் போன்று இருக்கும் தன்மையை விலக்கவில்லை. தீயசெயல்கள் பலவற்றை இப்பிறப்பில் செய்திருப்பதை நான் அறியேன். உமது திருவடிகளை அடியேன் எப்பொழுதும் நினைந்து வணங்குவேன். வெளியே தெரியாது எனது வயிற்றின் உள்ளே சூலைநோய் குடலைக் கட்டி முறுக்கி வேதனை தருவதை உமது அடியவனாகிய என்னால் தாங்க முடியவில்லை. ஆதலால், என் நோயை நீக்கி ஆட்கொள்வீராக.

## பத விளக்கம்

**கூற்று** - யமன்; **கொடுமை** - தீய செயல்கள்: **தோற்றாது** - வெளியே தெரியாது (வயிற்றுக் குடலை வருத்தும் சூலைநோய் வெளியே தெரியவில்லை); **ஆற்றேன்** - தாங்க முடியவில்லை (சூலை நோயின் தாக்கத்தை); **அதிகை** - திருவதிகை.

## பாடல் - 02

திருவைந்தெழுத்தின் சிறப்புகளைக் கூறுவது நமச்சிவாயப் பதிகமாகும். சைவ நாயன்மார் நால்வரும் (சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்) நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தின் மகிமை பற்றிப் பாடியுள்ளனர். பின்வருவது, நாவுக்கரசரால் பாடப்பட்ட நமச்சிவாயப் பதிகத்தில் உள்ள தேவாரமாகும். எந்தத் தலத்தின் மீதும் பாடப்படாத காரணத்தால், இதனைப் **'பொதுப் பதிகம்'** என்பர். இது அவரைக் கல்லோடு கட்டிக் கடலில் போட்டபோது பாடிய நமச்சிவாயத் திருப்பதிகத்தில் உள்ள ஒரு பாடலாகும்.

**தலம்** - பொது **பண்** - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

**பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை**
**ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்**
**கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது**
**நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை :

பூக்கள் சிறப்பானது பொலிவுள்ள தாமரை மலராகும். பசுக்களுக்குச் சிறப்பாக அமைவது இறைவனின் அபிடேகத்துக்கு அவை தரும் பஞ்சகௌவியங்களாகும். அரசனுக்கு அருங்கலமாவது ஆட்சியில் நடுநிலையைக் கடைப்பிடித்தலாகும். அவ்வாறு நாவுக்குச் சிறப்பாக அமைவது ந,ம,சி,வா,ய என்னும் திருவைந்தெழுத்தை உரைத்தலாகும்.

### பத விளக்கம்

**அருங்கலம்** - சிறப்பு; **பொங்கு** - பொலிவு; **ஆ** - பசு; அரன் - இறைவன்; அஞ்சு - பஞ்சகௌவியம் (கோசலம், கோமயம், பால், தயிர், நெய்) கோ - அரசன்; கோட்டம் - கோணல்; இல்லது - இல்லாமை; கோட்டமில்லது - கோணல் இல்லாமை, நடுவுநிலை.

## (இ) சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

### பாடல் - 01

இறைவன் சுந்தரரது திருமணநாளின் போது, கிழப்பிராமண வடிவம் தாங்கி வந்து, அவரைத் தடுத்தாட்கொண்டார். பின்னர் திருவெண்ணெய் நல்லூர் என்ற தலத்துக்கு, சுந்தரரை அழைத்துச் சென்றார். அங்கு கிழப்பிராமண வடிவில் வந்த இறைவன் மறைந்தருளினார். தம்மைத் தடுத்தாட்கொள்ள வந்தவர் இறைவனே என்பதை அறிந்த சுந்தரர் மனமுருகி நின்றார். அப்போது இறைவன், ‘‘நம்மைச் செந்தமிழாற் பாடுக’’ என்று திருவாய்மலர்ந்தருளினார். சுந்தரர், இறைவனைப் ‘‘பித்தா’’ என்று ஏசிய சொல்லையே முதலாகக் கொண்டு இப்பதிகத்தை பாடினார். இது சுந்தரரால் பாடப்பட்ட **முதலாவது** தேவாரமாகும்.

தலம் - திருவெண்ணெய் நல்லூர் பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தா பிறை சூடிபெரு மானேயரு ளாளா
ஏத்தான் மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை :

பித்தனே! சந்திரனைச் சூடியவரே, எங்கள் பெருமானே, அருள் உடையவரே, பெண்ணை நதியின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி இருக்கும் தந்தையே, நான் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன்; எப்போதும் நினைக்கின்றேன். நீரும் என்னை உன் மனதுள் வைத்தாய். நான் உனக்கு அடிமையாகிவிட்டேன். இனி ஒருபோதும், ''நான் உனது அடிமை அல்லன்'' என்று சொல்லமாட்டேன்.

## பத விளக்கம்

**பிறைசூடி** - பிறைச்சந்திரனைத் தலையில் சூடிய சிவன்; **ஆளாய்;** அடிமையாய் - **அத்தா** - தலைவனே, தந்தையே.

## பாடல் - 02

சுந்தரர் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு வந்தார். ஒருநாள் இரவு, அவர் நித்திரை செய்யும்போது சிவபெருமான் கனவில் தோன்றினார். ''மழபாடிக்கு வருவதற்கு மறந்தாயோ'' என்று வினாவினார். சுந்தரர் நித்திரை விட்டு எழுந்து. திருமழபாடிக்குச் சென்றார். அங்குள்ள இறைவனை வணங்கி, பாடியருளியது இத் திருப்பதிகம்.

தலம் - திருமழபாடி பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை :

பொன் போன்ற திருமேனியை உடையவரே, இடையில் புலித்தோலை உடுத்து, மின்னல் போன்ற சடையில் விளக்குகின்ற கொன்றை மாலையை அணிந்தவனே. தலைவனே, விலை உயர்ந்த இரத்தினம் போன்றவனே, திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போன்றவரே, எனக்குத் தாய் போல் விளங்குபவரே, இப்போது உன்னை அல்லாது வேறு யாரை நான் நினைப்பேன்.

### பத விளக்கம்

**மேனி** - திருமேனி; **அரை** - இடை; **அசைத்து** - உடுத்து; **மன்** - தலைவன்; **மாமணி** - இரத்தினம்; அன்னை **- தாய்.**

### (ஈ) திருவாசகம்

சைவ சமய குரவர்களுள் மாணிக்கவாசக சுவாமிகளும் ஒருவர், அவரால் பாடப்பட்ட பாடல்கள் திருவாசகம், திருக்கோவையார் என்பவையாகும். அவை எட்டாந் திருமுறையில் அடங்குகின்றன. திருவாசகத்தில் திருச்சாழல் என்னும் பகுதியில் உள்ள பாடல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

**பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்**
**பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ**
**பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை**
**ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை :

இறைவன் பூசிக்கொள்வது வெண்ணீறாகும். ஆபரணமாக அணிவது சீறுகின்ற பாம்பாகும். பேசுவது வேதமாகும். இவ்வாறு பூசுவதும் அணிவதும் செய்வதனால் எல்லா உயிர்களுக்கும் உள்ள வடிவையே தாமும் வடிவாகக் கொண்டுள்ளான் என்று, சாழல் கொட்டி விளையாடுவோம்.

### பத விளக்கம்

**பூண்பது -** (ஆபரணமாக) அணிவது; **அரவம்** - பாம்பு; **மறை** - வேதம்; **காணேடீ** - (தோழியே) காண்பாயாக; சாழல் - மகளிர் விளையாட்டுகளில் இது ஒருவகை. சாழல் விளையாட்டில் மகளிர் பாடுவது போன்று இப்பாடல் முறையும் அமைந்து காணப்படுகின்றது.

## (உ) திருவிசைப்பா

திருவிசைப்பா என்பது இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் என்று பொருள்படும், சைவத் திருமுறைகள் பன்னிரெண்டில், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னுமிரண்டும் ஒன்பதாந் திருமுறையில் அடங்குகின்றன. திருமாளிகைத்தேவர் சேர்ந்தனார். கருவூர்த்தேவர் முதலிய ஒன்பதின்மர் திருவிசைப்பாக்களைப் பாடியுள்ளனர். அவற்றுள் திருமாளிகைத் தேவர் பாடிய ''ஒளிவளர் விளக்கே'' என்னும் திருவிசைப்பா அடியார் களால் மிகவும் விரும்பிப் பாடப்படுவதாகும்.

**தலம்** - கோயில் (தில்லை) **பண்** - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

**ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே**
**உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே**
**தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே**
**சித்தத்துள் தித்திக்கும் தேனே**
**அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே**
**அம்பலம் ஆடரங் காக**
**வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்**
**தொண்டனேன் விளம்புமா விளம்பே.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை :

ஒளி மிகுகின்ற விளக்கே, அழிவற்ற ஒப்பில்லாத பொருளே, சுட்டி அறியும் அறிவுக்கும் அப்பால் நின்று, சிவஞானத்தால் அறியக்கூடிய பேரறிவே, ஒளிபொருந்திய பளிங்கின் பேரொளியினை உடைய மாணிக்கமலையே, மனத்தின் கண்ணே, இனிக்கும் தேன் போன்றவரே, அன்புடைய மெய்யன்பர்களது உள்ளத்தின்கண் பேரானந்தத்தை விளைவிக்கும் கனியே.

சிற்றம்பலத்திலுள்ள பொன்னம்பலத்தையே ஆனந்த நடன அரங்கமாகக் கொண்டு, தெய்வீக நடனத்தைச் செய்யும் உன்னை, அடியவனாகிய நான் புகழ்ந்து. வியந்து உரைப்பது எவ்வாறு என்பதைக் கூறியருள்வாயாக.

### பத விளக்கம்

**உலப்பு** - அழிவு; **உணர்வு** - சுட்டி அறியும் அறிவு; **மணி** - மணிக்கம்; **ஆனந்தக் கனி** - இனிபத்தைத் தருகின்ற கனி; **அம்பலம்** - சிற்றம்பலம்; **அரங்கு** - மேடை, சபை; **தெய்வக் கூத்து** - ஆனந்த நடனம்; **விளம்பு** - உரை, கூறு; சித்தம் - மனம்.

## (ஊ) திருப்பல்லாண்டு

திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறையில் அடங்கும். திருப்பல்லாண்டு என்பது. ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனை, 'பல்லாண்டு வாழ்வாயாக' என வாழ்த்திப் பாடுகின்ற திருப்பாடல்களாகும். அது தில்லை, (கோயில்) என அழைக்கப்படும் சிதம்பரத்தில். திருவாதிரைத் திருநாளில் ஓடாது நின்ற தேரை ஓடச் செய்யச் சேந்தனாரால் பாடப்பட்டது.

**தலம்** - கோயில் **பண்** - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

**சீரும் திருவும் பொலியச் சிவலோக**
**நாயகன் சேவடிக்கீழ்**
**ஆரும் பெறாத அறிவு பெற்றேன்**
**பெற்றதார் பெறுவார் உலகில்**
**ஊரு முலகுங் கழற வுழறி**
**உமைமண வாளனுக்காட்**
**பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்**
**பல்லாண்டு கூறுதுமே.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை :

பெருமையும், செல்வமும் கொண்டு விளங்குகின்ற தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனது திருவடிகளின் கீழ்த் தொண்டு புரிந்து. (உலகில்) வேறெவரும் பெறாத மெய்ஞ்ஞான அறிவை நான் பெற்றேன். அவ்வாறாக வேறு யார் பெறுவார்? ஆகவே, ஞானத்தைப் புகழ, அன்பின் மிகுதியால் நாக்குழறி, உமாதேவியின் மணவாளனுக்கு நான் அடிமை என்று கூறி, பூமியிலுள்ளோரும், விண்ணிலுள்ள தேவர்களும் அறியும்படி, அவரைப் 'பல்லாண்டு வாழ்வாயாக' என்று வாழ்த்துவோமாக.

### பத விளக்கம்

**சீர்** - பெருமை; திரு - செல்வம்; **பொலிய** - விளங்க; **சிவலோக** நாயகன் - தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவன்; **அறிவு** - மெய்ஞ்ஞானம்; **ஆரும்** - வேறெவரும்; **பெற்றது** - நான் பெற்ற அறிவை; **ஊர்** - ஊரில் உள்ள மக்கள், **உலகு** - உலகு மக்கள்; **கழற** - நான் பெற்ற ஞானத்தைப் புகழ; **உழறி** - அன்பின் மிகுதியால் நான் நாக்குழறி; **உமை மணவாளனுக்கு** - உமாதேவியின் மணவாளனாகிய இறைவனுக்கு; **ஆள் என்று** - அடிமை என்று; பார் - பூமி; **விசும்பு** - ஆகாயம்; **அறியும் பரிசு** - பூமியிலுள்ளாரும் தேவர்களும் அறியும்படி; **பல்லாண்டு கூறுதும்** - பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துவோமாக.

### (எ) பெரியபுராணம்

கோயில்களில் பஞ்சபுராணம் பாடும் போது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடிய பின்னர் பெரியபுராணம் பாடப்படும். சைவத் திருமுறைகளுள் பெரியபுராணம் பன்னிரெண்டாவதாகும். அது திருத்தொண்டர் புராணம் எனவும் அழைக்கப்படும். பெரியபுராணம் சேக்கிழார் சுவாமிகளால் இயற்றப்பட்டது. அவர் பெரிய புராணத்தைப் பாடுவதற்கு. ''உலகெலாம்'' என்னும் முதலடியை எடுத்துக் கொடுத்தவர் சிவபெருமான். சேக்கிழார் சுவாமிகள் அந்த அடியை முதலாகக் கொண்டு பெரியபுராணத்தைப் பாடினார்.

திருச்சிற்றம்பலம்

**உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை :**

உலகத்தோர் எல்லோரும் அறிந்து துதிப்பதற்கு அரியவனும், பிறைச்சந்திரனையும், கங்கா நதியையும் சடாமுடியிலே தரித்தவனும், அளவில்லாத சோதி வடிவானவனும், தில்லையிலுள்ள சிற்றம்பலத்திலே ஆனந்த நடனமாடுகின்றவனும் ஆகிய சிவபெருமானின் மலர்ந்த திருவடிகளை வாழ்த்தி, வணங்குவோமாக.

**பத விளக்கம்**

**நிலவு** - சந்திரன்: **நீர்** - கங்கை; **வேணி** - சடாமுடி; **அலகில் சோதி** - எல்லையில்லா **ஒளி; அம்பலம்** - தில்லைச் சிற்றம்பலம்; **சிலம்படி** - ஒலிக்கின்ற திருவடி.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. திருக்கேதாரம் என்னும் தலத்தின் அமைவிடம், சிறப்பு என்பவற்றை எழுதுக.
2. ''தேவாரங்களைப் பாடிய நாயன்மார் நோய் நீக்கினர்'' இதற்கு உதாரணம் தருக.
3. திருப்பல்லாண்டு என்பதன் பொருள் விளக்கம் யாது?
4. பெரியபுராணம் வேறு எவ்வாறு அழைக்கப்படும் ?

## செயற்பாடு

1. நால்வரும் 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்தைப் பற்றிப் பாடியுள்ளனர் என்பதற்கு நீங்கள் காட்டும் ஆதாரங்களைக் அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

2. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

| பாடல் முதலடி | பாடியவர் | நூலின் பெயர் | தலம் | பண் |
|---|---|---|---|---|
| 01. ‘‘தோடுடைய செவியன்.’’ | ............ | தேவாரம் | ............ | .......... |
| 02. ‘‘தொண்டரஞ்சு....’’ | ............ | ............ | ............ | .......... |
| 03. ‘‘கூற்றா யினவா...’’ | ............ | ............ | ............ | .......... |
| 04. ‘‘பூவினுக் கருங்கலாம்...’’ | ............ | | பொது நமச்சிவாயப் பதிகம் | .......... |
| 05. ‘‘பித்தா பிறை சூடீ....’’ | ............ | ............ | ............ | .......... |
| 06. ‘‘பொன்னார். மேனியனே...’’ | ............ | ............ | ............ | .......... |
| 07. ‘‘பூசுவதும்...’’ | ............ | ............ | எட்டாந். திருமுறை | .......... |
| 08. ‘‘ஒளிவளர் விளக்கே...’’ | ............ | ............ | ............ | .......... |
| 09. ‘‘சீரும் திருவும்...’’ | ............ | ............ | ............ | .......... |
| 10. ‘‘உலகெலாமுணர்ந்து...’’ | ............ | ............ | பன்னிரெண்டாம் திருமுறை | |

## பாடச்சுருக்கம்

- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய தேவாரமுதலி மூவராலும் தேவாரம் பாடப்பட்டது.
- மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம் எட்டாம் திருமுறையில் அடங்கும்.
- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன ஒழுங்கு முறையில் ஓதப்படும். அவை பஞ்சபுராணம் எனப்படும்.